
'சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்'



'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற ஆக்கங்கள்:

| | | |
|---|---|---|
| 1. பஞ்சாமிர்தம் | சிறுவர் நாடகங்கள் | 2015 |
| 2. சட்டத்தின் திறப்பு விழா | வானொலி நாடகங்கள் | 2016 |
| 3. பஞ்சாயுதம் | நாடகங்கள் | 2017 |
| 4. மனவைரம் | வானொலி நாடகங்கள் | 2018 |
| 5. வண்டல்மண் | சிறுவர் கதைகள் | 2018 |
| 6. விதை | நாடகங்கள் | 2019 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்'

# பொக்கிசம்

ஆசிரியர் வெளியீடு
2019

'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்
'Maravanpulo' Sellam Ambalavanar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**' பொக்கிசம் '**

(சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்)

(c)'மறவன்புலோ' செல்லம் அம்பலவாணர்

முதற்பதிப்பு: 2019

ISBN: 978-955-42626-4-5

பதிப்பாசிரியர்:

செ.அம்பலவாணர்

478/28 அளுத்மாவத்தை வீதி, கொழும்பு–15

0714280809

அச்சுப்பதிப்பு:

K.J.Enterprises

63 விகாரை லேன்

கொழும்பு –06



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொக்கிசத்தின் உள்ளே உள்ள

## சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்..

1. அம்மா
2. அப்பா
3. ஆசிரியர்
4. தாய்நாடு
5. இதுவேண்டும்
6. ஒற்றுமையே பலம்
7. கல்வி
8. முதுமையைப் பேணுவோம்
9. இதைக்கேளுங்கள்
10. போதையற்ற வாழ்வு வாழ்வோம்
11. முளையில் கிள்ளி எறிந்திடுவோம்
12. நற்பண்புகள்
13. சுத்தம் சுகமான வாழ்வுதரும்
14. சூழல் சுத்தம்
15. விலையில்லாதது
16. சேமிப்பு
17. உடற்பயிற்சி
18. தமிழ் மொழி வாழ்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அம்மா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. அம்மா



அன்பின் உருவே அமுத சுரபியே
அகிலத்தின் தெய்வமே அம்மா..
பொன்னும் பொருளும் அள்ளிக் கொடுத்தும்
கிடையாச் செல்வம் அம்மா..!

உடலில் சுமந்து உயிரில் பகிர்ந்து
உருவம் தந்த தெய்வம்..
உருவம் தழைக்க உதிரம் கொடுத்து
உலகைக் காட்டினாய் அம்மா.!



பத்து மாதம் சுமந்து என்னை
பாரில் உதிர்த்த தெய்வம்..
பாசம் அதனை பாலாய் ஊட்டி
பண்பைப் புகட்டினாய் அம்மா..!



கிள்ளை மொழியில் பேசும் என்னை
அள்ளி அணைத்துக் கொஞ்சி..
சின்னக் கதைகள் தானே சொல்லி
தூங்க வைக்கும் அம்மா..!

உயிர் எழுத்து அதனில் அ வை எடுத்து
மெய் எழுத்தினிலே ம் ஐ இணைத்து
உயிர்மெய் எழுத்தின் மா வையும் சேர்த்து என்
உதடு சொன்னதே அம்மா..! என்
உயிரும் உடலும் (மெய்யும்) என் அம்மா..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அப்பா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உ. அப்பா



அன்பையும் அறிவையும்
ஒன்றாய்க் கலந்து
பண்பையும் பாசத்தையும்
பலரசமாய்க் குழைத்து
எண்ணையும் எழுத்தையும்
எனக்கு ஊட்டி வளர்த்து
ஏணியாய் வாழ்க்கைக்கு ஏற்றிவிட்ட அப்பா.. !



தோளிலே எனைச்சுமந்து தூரத்தைக் காட்டி
என்னிலும் உயர்ந்துசெல் என்று வழிகாட்டி
பாறையாய் இருந்த என்னை பயன்தரு நிலமாய்
பண்படுத்தி சீர்செய்த பெருமகன் நீதானே.. !!



தோளிலும் மிஞ்சி விட தோழனென எண்ணி
தோழமையாய் எம்உறவை தொடர்கதை ஆக்கி
வாழ்வினது அனுபவத்தைப் பாடமாய்ப் புகட்டும்
அனுபவத்தின் ஆசானும் நீதானே அப்பா.. ..!



கண்களில் கோபத்தை காட்டிஎமை வளர்ப்பாய்
அன்பினை மனதினுள் பூட்டி வைத்திருப்பாய்..
துன்பங்கள் யாவையும் உன்னோடு வைத்தே
இன்பங்கள் நமக்களித்து ஓடாகித் தேய்வாய்....!



அன்னையும் தந்தையுமே முன்னறி தெய்வம்
தந்தைசொல் மிக்கதொரு மந்திரமும் இல்லை.. ..
ஆதிமுதல் அந்தம்வரை நிஜமாயும் நிழலாயும்
அணைத்தெடுக்கும் ஒரேஉறவு தந்தை உறவன்றோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஆசிரியர்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆசிரியர்




அகரம் தனை எமக்கு,
அன்புடனேயே உரைத்து..
ஆசானாய் பாசத்துடன், பண்பும்
ஆளுமையும் கலந்து..
இயந்திர இவ்வுலகில்,
இன்சொற்களையே பகிர்ந்து..
ஈசன் இவன்தானோ அன்றி,
ஈதல் இதுதானோ என
உள்ளத்தில் நாம்வினவ, எமக்கு
உரை கல்லாயிருந்து..
ஊர்உலகம் போற்றவாழ,
ஊன்றுகோலாய் இருந்தவரே..
என்றும் இனியவையே புகட்டி
எம்மனதையே பண்படுத்தி..



ஏணியாய் இருந்துமெல்லோ எமை,
ஏற்றிச் சிறக்கவைத்தீர்.
ஐம்புலன்களை நெறிப்படுத்தி,
ஐயமின்றி நாம்வாழ
ஒற்றுமையைப் பேணிநாமும் ஒன்றாய்
ஒரு குலமாய் வாழ
ஓராயிரம் பேருடனே
ஓரணியில் ஒழுங்கமைத்து, கல்வி என்ற
ஔடதம் தனைக் கொடுத்து
அஃதால் அகிலமது போற்ற
கற்றவனாய் உலவவிட்ட எங்கள்
கண்கண்ட தெய்வமல்லவோ..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பு. தாய்நாடு






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ↳. தாய்நாடு



இந்து சமுத்திர முத் தென வந்தவர்
அழைத்து மகிழ்ந்தது நம்நாடு..
பொங்கிஎழும்அலை வந்து கரைதொடும்
மாகடல் சூழ்ந்தது நம்நாடு .. ..



போதி மரத்தடிப் புத்தரின் பாதம்
பதிந்து சிறந்தது நம்நாடு.. ..
இந்து கிறிஸ்தவம் இஸ்லாம்
மதங்கள் சிறந்து விளங்கும் நம்நாடு.



சிங்களம் செந்தமிழ் ஓங்கி ஒலித்து
சீர்பெற்றுத் திகழ்வது நம்நாடு.. ..
சிங்களவர் தமிழர் சோனகர் பறங்கியர்
ஒன்றாய்க் குலவும் நம்நாடு .. ..



சிங்கமதைக் கொடியாகவே கொண்டு
சுதந்திரம் பெற்றது நம்நாடு..
சிகிரியா அதை சிறப்பின் சின்னமாய்
பேணி மகிழ்வது நம்நாடு .. ..



இந்து சமுத்திர முத்தினை ஆளும்
நாளைய தலைவர்கள் நாங்கள் தான்
நாடு நலம்பெற நல்லவையே செய்து
நன் மக்களாகவே வாழ்ந்திடுவோம் .. ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௫. இது வேண்டும்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இது வேண்டும்



அன்பு வேண்டும் அனைத்திடமுமே
ஆசை வேண்டும் தாய்மொழியினிலே
இரக்கம் கொண்டிடு உயிர்களிடம்
ஈகை செய்திடு பொருள்களையே ..



உண்மை வேண்டும் உன் உரையினிலே
ஊக்கம் வேண்டும் முயற்சியிலே
எளிமை கொண்டு உன் வாழ்வினிலே
ஏற்றம் கண்டிடு கல்வியிலே ..



ஐக்கியம் வேண்டும் அயலுடனே
ஒற்றுமை வேண்டும் உறவிடையே
ஓடி விளையா உடல் திடம்பெறவே
ஔவியம் பேசேல் இளமையிலே
அஃதே உனக்கழகு அறிந்திடுவாய்..



உடல் அழகல்ல உனதழகு
உள்ளத்து அழகே உன் அழகு
உயர்ந்த செயல்களை நீசெய்தால்
உன் அழகே உலகின் அழகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. ஒற்றுமையே பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஒற்றுமையே பலம்



ஓடிஓடி உணவு தனையே
தேடிச் சேர்க்கும் எறும்பைப்போல் ..
ஓடி நாமும் ஒன்றாயிருந்து
பலமாய் வாழ வழிசெய்வோம்....



கரிய காகம் சிறியஉணவைக்
கலந்து கூடி உண்ணல்போல்..
பெரிய உலகில் மனிதர் நாமும்
ஒன்றாய் சேர்ந்தே வாழ்ந்திடுவோம்.. ..



நாய்க்கு உணவு தந்துவிட்டால்
நன்றி காட்டும் தன்மைபோல்..
வாழ்க்கை தந்து காக்கும் ஈசன்
வல்ல பாதம் போற்றுவோம்.. ..



சூரியன் ஒன்றே சந்திரனொன்றே
பாரினில் காற்றுவெளி ஒன்றே..
வானவில்ஒன்றே வண்ணம்பலவே
ஈசனும் அவ்வாறுஎன்றறிவாய்.. ..




ஒன்றே தேவன் ஒருவனேஈசன்
என்ற பண்பினையேபேணி.
என்றும் போற்றி ஈசன்பாதம்
நன்றே தொழுது நலம்பெறுவோம்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. கல்வி









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. கல்வி



பள்ளி சென்று பாடம் தனையே
பயில வேண்டும் செல்வமே..
கல்வி அதனை கண்களாய் எண்ணி
கற்க வேண்டும் தங்கமே.. ..



துள்ளித் திரியும் பிள்ளை வயதில்
துடிப்புடன் பயில்வாய் கல்வியே..
அள்ள அள்ள குறையாச் செல்வம்
அறிவே அறிவாய் தங்கமே.. ..

அள்ளி அணைக்கும் அன்னை தந்தை
ஆசான் தானே தெய்வமே..
பள்ளி சென்று பழகும் நண்பர்
பலமாய இருப்பார் தங்கமே.. ..



கண்ணின் மணியே கல்வி அதுவே
கரையாச் செல்வம் தங்கமே..
பள்ளிப் பருவம் பசுமைக் காலம்
பறந்தால் வராது செல்வமே..




இளமைக் கல்வி சிலையில் எழுத்து
அதைநீ அறிவாய் தங்கமே.. ..
இதனை மனதில் இருத்தி கற்றால்
நாடு என்றும் போற்றுமே .. ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. முதுமையைப் பேணுவாம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. முதுமையைப் பேணுவாம்



காவோலைவிழ குருத்தோலை அது
சிரிப்பது என்பது பழமொழியே. .
காவோலைவிழ குருத்தோலை பற்றிப்
பிடிப்பது என்பது நம்மொழியே..!



நேற்றைய இளைமை நாளைய முதுமை
நாமறிந்த உண்மை இதுவன்றோ..
இம்மாற்றத்தின் உண்மையைப் புரிந்துநாம்
மூத்தவரைப் பேணிக் காத்திடுவோம்.. !



பொல்லுப் பிடிக்கும் பல்லுப்போன
நல்ல உள்ளம் தனிமையிலே ..
செல்லக் கதைகள் நாங்கள்பேசி
நலமாய் உளமதை ஆற்றிடுவோம் .. !

எமக்காய் உழைத்து எமக்காய் வாழ்ந்து
எமக்காய்த் தேய்ந்த உறவன்றோ..
எமக்காய்த் தேய்ந்த எங்கள் உறவை
அணைத்துப் பார்ப்பது நம்கடமையன்றோ..!



உடலது நலிந்து உளமது வெதும்பி
உலவிடும் உறவு அதுஅன்றோ..
நிலையெது வரினும் உளமதுகொண்டு
முதுமையை முதுசமாய்க் காத்திடுவோம்.. !
முதுமையை முதுசமாய்க் காத்திடுவோம்.. !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. இதைக் கேளுங்கள் ..







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. இதைக் கேளுங்கள் ..



பள்ளிக்குச் செல்கின்ற செல்வங்களே நானும்
சொல்வதைக் கொஞ்சம்தான் கேளுங்களேன்..

துள்ளித் திரிகின்ற பள்ளிப் பருவம்தான்
வெள்ளை உள்ளம் கொண்ட காலமதே..
வஞ்சகம் சூது பொறாமை பொல்லாப்புகள்
உள்ளத்தில் இல்லாத காலமடா..
உள்ளமே வெள்ளைக் கமலமடா..!



காலை எழுந்துநீ பாடங்களைப்படி
கருத்துடன் மனதினில் பதிந்திடுமே..
மாலையில் நண்பர் குழாமுடன் தான்சேர்ந்து
நன்றாய் விளையாடு நலன்பெறுவாய்..
நன்றாய் உடல்நலம் பெற்றிடுவாய்..!



பெற்றவர் உற்றமும் சுற்றமும் தானடா
வற்றாத பெரும்பலம் உந்தனுக்கு..
கற்றலிலே தேறி நற்றவனாயுன்னை
முற்றுலகும் போற்ற வாழ்ந்திடடா..
பெற்றவர்க்கும் அது பெருமையடா..!



மூத்தவர் தனைப்பணி முதியோரைக் கனம்பண்ணு
ஏத்திவைக்கும் ஏணிப் படிகளடா..
படைத்தவன் பதம்தனை நிதம்நிதம் நீதொழு
பறந்திடும் துன்பங்கள் பஞ்சாயே..
சிறந்திடுமே வாழ்வு சீர்சிறப்பாய்..!



பிறந்த திருநாடு சிறந்தது கேளடா
பெருமையை நீபேண வேணுமடா
அருமையாம் இவ்வாழ்வு அதைமறக்காது நீ
விரும்பிப் பெருமிதம் கொண்டிடடா
எண்ணிப் பெருமிதம் கொண்டிடடா..!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. போதையற்ற வாழ்வு வாழ்வோம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. போதையற்ற வாழ்வு வாழ்வோம்



தினமும் உன்னை வாழவைக்கும் பஞ்சுமெத்தையாம் அதை
பணம் கொடுத்து புகையை வாங்கி பாழடையச் செய்வதோ
மனதைக் கெடுத்து மனிதவாழ்வை மரணப் பொறிக்குள் தள்ளிடும்
புகையைத் தவிர்த்து புனித வாழ்வு வாழ்ந்திடுவோம் புவிமீதினிலே..!



சற்றுநேர இன்பத்துக்காய் சகதியில் வீழுவதோ
சுற்றம் உற்றம்வெறுத் தொதுக்க வேதனையில் வாழ்வதோ
முற்றுமே மறந்திடும்முழுக்குடியைக் கெடுத்திடும்
உற்ற குடிப் பழக்கமது உந்தனுக்குத் தேவையோ..!!



மனிதவர்க்கம் மாண்பு மிக்க வாழ்க்கை தனை வாழவே
இனிமையான இல்லறத்தை ஈந்துளான் இறைவனே
மனதினாலும் மறுமனை தொடாத கொள்கை கொண்டுமே
புனித வாழ்க்கை வாழ்ந்திடில் புகமுடியா நோய்களே..!



பாதைமாறிச் சென்ற பயணம் வேறு முடிவில் நிற்குமே
போதைவழியில் செல்லும் பயணம் புனிதவாழ்வைச் சிதைக்குமே
மாதை மகவை, மனையை, மகிழ்வை, மரணிக்கத்தான் செய்யுமே
போதை உனக்கு பொய்யைக் காட்டிப் புதை குழிக்குள் தள்ளுமே..!!



நாதியற்ற மனிதனாக நானிலத்தில் வாழ்வதா
பாதிவயதில் பருவவாழ்க்கைபாழாகத் தான் விடுவதா
பாதை மாறிப் பயணம் செய்து பாழ்ங்கிணற்றுள் வீழ்வதா
போதையற்ற வாழ்வு வாழ்ந்து பொலிவினோடு வாழ்வோமே..!
போதையற்ற வாழ்வு வாழ்ந்து பொலிவினோடு வாழ்வோமே..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. முளையிலேயே கிள்ளி எறிவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. முளையிலேயே கிள்ளி எறிவோம்..



சின்ன வீட்டு நாய்க்குட்டி
சொன்ன சொல்லைக் கேட்குது
வளர்ந்து விட்டால் நாய்க்குணம்
சொன்ன சொல்லைத் தட்டுதே..
சின்னச் நச்சுச் செடிதனை
சிரமம் இன்றிப் பிடுங்கலாம்
அதுநன்கு வளர்ந்து மரமானால்
நம்மால் அசைக்க முடியுமா.. ?



சின்னச் சின்னக் குப்பையை
சிரமம் இன்றி அகற்றலாம் ..
சேர்ந்து நாறும் குப்பையை
நம்மால் அகற்ற முடியுமா .. ??
ஐந்து வயது தன்னிலே
அன்புடன் எமை வளைக்கலாம் ..
அதுவே ஐம்பது ஆகிவிட்டால்
வளைக்க எண்ண முடியுமா.. ???



கெட்ட செயல்கள் யாவுமே
கிள்ள வேண்டும் முளையிலே ..
விட்டு அதுவும் பழகிவிட்டால்
நிறுத்தல் மிகவும் சிரமமே .. !!!
வளர விட்டால் எதுவுமே
வசப்பட்டு விடும் எம்மிலே..
எளிது அகற்றல் ஆதலால்
கிள்ள வேண்டும் முளையிலே .. !!!







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நற்பண்புகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. நற்பண்புகள்



சுத்தம் பேணி சுகாதாரமாக
கூழென்றாலும் குளித்துக் குடி ..
கந்தையான துணி என்றாலும்
சுத்தமாகவே துவைத்து அணி.. !
குற்றம் பார்க்கில் சுற்றமில்லை
கூடி வாழ்வதே பெருவாழ்வு..
சீறும் கோபமதனைத் தணிந்து
ஒன்றாய் வாழ வேண்டுமே.. !



கற்றோர், முதியோர், மூத்தோர்தனையே
பெற்றவர் போலவே பேணிநட ..
உற்றோர் இல்லா முதியோர்களுக்கே
உற்ற துணையாக ஆதரவழி.. !
இல்லாதவர்க்கு உள்ள பொருளை
நல்ல உள்ளத்துடன் உவந்துகொடு ..
ஈதல் உவத்தல் என்பவையேதான்
உன்னுடன் இறப்பின் பின்னரும்வருமே..!





வெள்ளம் போன்ற துன்பமதுவே
உன்னைத் தொடர்ந்து வந்திடினும்..
கொண்ட நல்ல கொள்கைகளையே
பேணிக் காத்திட மறவாதே... !
காலைமாலை கடவுளைக் கைதொழு
கவலைகள் அனைத்தும் பறந்துவிடும் ..
கடவுளினருளால் இம்மையும் மறுமையும்
இனிமையாய் அமையும் அறிந்துவிடு
இனிமையாய் அமையும் மனதிலிடு.. !





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13. சுத்தம் சுகமான வாழ்வு தரும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. சுத்தம் சுகமான வாழ்வு தரும்



கத்திக் கரைந்து கூட்டம் சேர்க்கும்
காகம் சுத்தம் செய்கின்றதே
பத்தும் பலதும் தெரிந்த நாம்தான்
சுத்தம் பேண ஏன் மறக்கின்றோம் .. ..



நித்தமும் காலையும் மாலையும் எங்கள்
பல்லைத் துலக்கி குளித்திடுவோம்
எத்தனை தூரம் சென்று வந்தாலும்
கைகால் அலம்பி உண்டிடுவோம் ..



சுத்தமான நிறை உணவைத் தேர்ந்து
சத்து நிறைந்த உணவாய் உண்டு
சுத்தமான தூய நீரையும் குடித்து
சுகதேகியாக வாழ்ந்திடுவோம்,,, ..



போதை புகைத்தல் பழக்கங் களினால்
வாழ்வே பாதை மாறிடுமே ..
மாறிய பாதையில் பயணம் செய்தால்
வேதனை தானே எஞ்சிடுமே .. ..!



சுத்தம்பேணி நித்தமும் இருந்தால் எமை
தொற்றும் நோய்கள் அணுகாதே..
பத்திரமாக உடற் பயிற்சிகள் செய்தால்
தொற்றா நோய்களும் நெருங்காதே .. ..!



நோயற்ற வாழ்வுக்கு அடி ஆதாரம்
நாம்பேணிப் போற்றும் சுகாதாரம் ..
நோயில் படுத்து அழுந்தாமலிருக்க
பேணிடுவோம் உடற் சுகாதாரம் .. !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சூழல் சுத்தம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. சூழல் சுத்தம்



சூழல் சுத்தம் சுகமளிக்கும்
அதை மறக்கக்கூடாது
வாழும் சூழல் வளமளிக்கும்
அழுக்காக்கக் கூடாது.. .. !

பச்சைப் பசுமை எங்கும் இருந்தால்
இச்சை போல மூச்சைவிடு.. ..
இஷ்டம் போல அதைநீ அழித்தால்
நச்சுவாயுவை மூச்சாய்எடு.. .. !



பச்சை மரம்தான் மழையைத் தருமே
காட்டு விலங்கின் வாழிடமதுவே.. ..
மரங்களை அழித்தால் சமநிலை குழம்பும்
அழிவேவிளைவு அறிந்திடுவாய்.. .. !



ஓடும் நீரை ஒழுங்காய் அகற்று
தேங்கிடில் வளரும் நோய்காவிகளே.. ..
வாகன தொழிலக கரும்புகையாலே
வந்திடும் ஓட்டை ஓசோனில்.. .. !



கண்ட கண்ட இடத்தில் எல்லாம்
குப்பை கூழம் போடாதே.. ..
குப்பைத் தொட்டியில் பிரித்துப் போட்டால்
எப்பொழுதும் நோய் அணுகாதே.. .. !




சூழல் சுத்தம் ஊரைக்காக்கும்
உயிராய்ப் பேண வேண்டுமே..
நாளைய சந்ததி மகிழ்வாய் வாழ
காப்போம் இயற்கை அன்னையையே.. ..!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. விலையில்லாத பூ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15. விலையில்லாத பூ



உதட்டில் மலரும் அரும்பு இது எம்
உறவில் இனித்திடும் கரும்பு ..
பதட்டம் மறைத்திடும் மருந்து –இதைப்
பார்த்திடில் நெஞ்சுக்கு விருந்து .. ..



கோபம் தன்னைக் கொல்லும் –பல
கொடியோர் செயலை வெல்லும் ..
தீபம் போலே ஒளிரும்–மனத்
தீமைகள் யாவையும் ஒளியும் .. ..



மழலையின் முகத்தினில் பூக்கும் –வரும்
மனத்துயர் யாவையும் நீக்கும் .. ..
வாழ்க்கையில் எழிலினைச் சேர்க்கும் –மன
உணர்ச்சியை வெளிப்படக் காட்டும்



வள்ளுவர் பாட்டிலும் இருக்கும் –இள
வஞ்சியர் உதட்டிலும் மலரும் ..
உள்ளங்கள் இதனால் மயங்கும்
உறவினையே பல மாக்கும் .. ..



கவலையைத் தீர்த்திடும் மருந்து –இதழ்க்
களிப்பால் நடாத்தும் விருந்து .. ..
புன்னகைப்பு என்றும் இதுஅழைப்பு –அதுவே
விலையில்லாத புன் சிரிப்பு .. ..!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சேமிப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. சேமிப்பு






கோடை காலம் தன்னிலே
கூடி எறும்பு உணவையே
தேடிச் சிறிதை உண்ணுமே
மீதி புற்றில் சேர்க்குமே..
மாரி மழையும் பெய்திட
நீரது எங்கும் நிறைந்திட
புற்றில் சேர்த்த உணவையே
எறும்பு உண்டு மகிழுமாம்..!



சின்னச் சின்ன மழைத்துளி
சிதறி மண்ணில் விழுந்துமே
துளியும் விரயமின்றி பாய்ந்திடில்
அணையில் சேர்ந்து நிரம்புமாம்..
கோடை காலம் வந்திட
குடிக்க நீரும் அருகவே
அணையில் சேர்த்த நீருமே
குடிக்கத் துணையாய் இருக்குமாம்..!





உடலில் உறுதி இருக்கையில்
உழைப்பில் சிறிதை சேமித்தால்
உறுதி குலைந்த பருவத்தில்
நிமிர்ந்து நிற்க உதவுமாம்....
சின்னஞ் சிறிய வருவாயில்
சிறுகச் சிறுகச் சேமித்தால்
சிறுமை போக்கி உலகினிலே
பெருமையுடன் நாம் வாழ்ந்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 17. உடற்பயிற்சி



ஒன்று இரண்டு மூன்று என்று
ஒன்று கூடி பாலர் நாம்
பாடி ஆடி ஓடி அசைந்து
உடற்பயிற்சி செய்வோமே..



கொஞ்சிக் கொஞ்சிப் பேசி நாமும்
குயிலைப் போலப் பாடுவோம்..
கோல மயில் போல நாமும்
ஆனந்த மாய் ஆடுவோம் .. ..



சின்னஞ் சிறிய சிட்டுப் போல
சிங்காரப் பாட்டி சைத்து..
வட்டமாக நாம் பறந்து
வடிவங்கள் பல காட்டிடுவோம் .. ..



புள்ளி மானைப் போல நாமும்
துள்ளித் துள்ளி ஓடுவோம் ..
பூனை போல பதுங்கிப் பதுங்கி
மெல்ல நடை போடுவோம்..



கையைக் கையை வீசி நாமும்
களைப் பில்லாமலே நடந்து
பையப் பைய பாடி ஆடி
உடற்பயிற்சி செய்வோமே.
பையப் பைய பாடி ஆடி
உடற் பயிற்சி செய்வோமே !!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18. தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானம் அளந்த அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே. (வாழ்க..)

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே (வாழ்க..)

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்க
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை அகன்று
சுடர்க தமிழ் நாடே.
வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானம் அளந்த அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே.
வளர்மொழி வாழியவே! வளர்மொழி வாழியவே!
வளர்மொழி வாழியவே!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்தாய்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சிறுவர்களுக்கான கொஞ்சுமொழிக் கவிதைகள்'

# பொக்கிசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org